# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சர்வதேச விருது

**சென்னை, டிச. 2:** பாதுகாப்பு அம்சங்களை சிறப்பாகக் கடைப்பிடித்து வரும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தை கௌரவிக்கும் விதமாக, உலக பாதுகாப்பு அமைப்பு சார்பில், சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கான சர்வதேச தொழில்முறை சங்கமாக உலக பாதுகாப்பு அமைப்பு அமெரிக்காவில் செயல்பட்டு வருகிறது. பாதுகாப்பு மற்றும் விபத்துத் தடுப்பு தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிப்பது இதன் முக்கிய நோக்கமாகும். இந்த அமைப்பு சார்பில், ஒவ்வோர் ஆண்டும் ஆறு நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்து விருது வழங்கப்படுகிறது. அந்த வகையில், நிகழாண்டில் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தர நிலைகளை மிகச் சரியாக கடைப்பிடித்து, பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த மதிப்புமிக்க விருதை இந்தியாவிலிருந்து சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. முன்மாதிரியான பாதுகாப்பு தரத்தை உறுதி செய்தல், பாதுகாப்புப் பதிவுகளை திறம் பட பராமரித்தல் உள்பட பல்வேறு பாதுகாப்பு அம்சங்களை சிறப்பாக செய்து வருவதற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பயணிகளுக்கு உலகத்தரத்தில் சேவையும், சிறந்த பாதுகாப்பும் அளித்து வரும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்துக்கு உலக பாதுகாப்பு அமைப்பு வழங்கிய சர்வதேச பாதுகாப்பு விருது.